DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.24

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பால்ராஜ் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 1st day of July, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது செங்குன்றாபுரம் காளியம்மன் கோவில் தெருவில் வசித்துவருகிறேன். கடந்த 20 ஆண்டுகளாக தென்பாண்டியன் திருமண அமைப்பாளர் என்ற சங்க அமைப்பில் உறுப்பினராக உள்ளேன். திருமண தரகர் எனது வேலை ஆகும். அதே அமைப்பில் டி. கல்லுப்பட்டியில் உள்ள சோனைமுத்து என்பவரும் திருமண தரகராக இருந்து வருகிறார். அவர் என்னிடம் w. புதுப்பட்டியில் ஒரு வரன் இருப்பதாகவும், அந்த பெண்ணிற்கு அவரது பெற்றோர்களால் நகை அணிவிக்க முடியாது என்றும், அவ்வாறு ஏதேனும் மணமகன் இருந்தால் தன்னிடம் தெரிவிக்குமாறும் என்னை அணிகினார். நான் எங்கள் ஊரைச்சேர்ந்த செல்வகணேசன் என்பவரை w. புதுப்பட்டிக்கு அழைத்து சென்று நீராறு மகள் பாண்டீஸ்வரி என்பவரை பெண் பார்க்க சொன்னேன். இருவரும் பார்த்து பேசி செல்வகணேஷ் நகைகள் ஏதும் இன்றி பாண்டீஸ்வரியை திருமணம் செய்ய சம்மதம் தெரிவித்தார். பின்னர் 4 வருடங்களுக்கு முன்பு தீபாவளிக்கு சற்று முன்பு பாண்டீஸ்வரிக்கு பூ வைக்கும்

படலம் நடைபெற்றது. அதற்கு பின்னர் செல்வகணேஷ் w. புதுப்பட்டிக்கு போவதும் பாண்டீஸ்வரி செங்குன்றாபுரம் வருவதுமாக இருந்தார்கள். தீபாவளிக்கு சற்று முன்பு ஒரு நாள் செங்குன்றாபுரம் வந்த பாண்டீஸவரியை செல்வகணேஸ் w. புதுப்பட்டிக்கு கொண்டுவிடுவதற்காக சென்றார். அவ்வாறு கொண்டு சென்றுவிட்டுவிட்டு செல்வகணேஷ் w. புதுப்பட்டியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தவர் அவரது வீட்டிற்கு வரவில்லை. வீட்டில் தேடினார்கள். போனில் வருவதாக சொன்ன செல்வகணேஷ் வரவில்லை என்று குடும்பத்தார் தேடியதில் செல்வகணேஷ் எங்கள் ஊர் கோட்டையம்மன் கோவில் அருகில் எரிந்த நிலையில் இறந்து கிடந்தார். இது சம்பந்தமாக எனக்கு தகவல் தெரிந்து நானும் சென்று பார்த்தேன். w. புதுப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள். இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்ததை தெரிந்து கொண்டேன்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை.</u>